1379

TAMIL
SECOND BOOK

OFFICE OF THE ... 13 DEC 1940 MADRAS

BY

S. G. DANIEL, B.A.

Madras Educational Service (Retired)

இரண்டாம் புத்தகம்

494.81186

(Revised in accordance with the Elementary School Syllabus 1939)

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
MADRAS BANGALORE SECUNDERABAD COLOMBO
1940

Number of Editions printed prior to 1930, Thirteen

Reprinted, 1930 (14th Edition)
Reprinted, 1932 (15th Edition)
Reprinted, 1932 (16th Edition)
Reprinted, 1933 (17th Edition)
Reprinted, 1934 (18th Edition)
Reprinted, 1934 (19th Edition)
Reprinted, 1936 (20th Edition)
Revised, 1937 (21st Edition)
Reprinted, 1938 (22nd Edition)
Reprinted, 1939 (23rd Edition)
Revised, 1940 (24th Edition)

உபாத்தியாயருக்குக் குறிப்புகள்

1. பாடத்தை வாசிக்க ஆரம்பிக்குமுன் உபாத்தியாயர் அப் பாடத்தில் சொல்லியிருக்கும் விஷயத்தைப் பிள்ளைகளுடைய வாழ்க்கைக்குச் சம்பந்தப்படுத்தி அவர்களோடு அதைப்பற்றி சம்பாஷிக்கவேண்டும்.

2. அச்சமயத்தில் உபாத்தியாயரும் பிள்ளைகளும் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, பாடத்துக்குச் சம்பந்தமான பொருள்கள், உருவங்கள், படங்கள் முதலிய உபகரணங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு சம்பாஷிக்கவேண்டும். புதிய பாடத் திட்டத்திற் கிணங்க இப்புத்தகத்தில் முதற்புத்தகத்திலில்லாத நானூறுக்கதிகமான புதுச் சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாடத்திலும் வரும் புதுச் சொற்களை அந்தந்தப் பாடத்தின் தலைப்பில் குறித்துக் காட்டியிருக்கிறது. சம்பாஷிக்கும்போது உபாத்தியாயர் அப்புதுச்சொற்களையும் பிள்ளைகள் தங்கள் சம்பாஷணையில் உபயோகிக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

3. சம்பாஷிக்கும்போது பாடத்துக்கு அதிக சம்பந்தமில்லாத விஷயங்களில் பிள்ளைகளுடைய கவனம் செல்லாதபடியும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

4. விஷயங்கள் யாவும் பிள்ளைகள் மனதில் நன்ருய்ப் பதிந்த பின், அவற்றில் ஏதாவதொரு சிறு வாக்கியத்தைக் குறிப்பிட்டு, அதைப் பிழையின்றி பிள்ளைகள் எழுதும்படி செய்து, அதன்பின் புத்தகத்தைத் திறந்து வாசிக்கச் சொல்லவேண்டும்.

5. பிள்ளைகள் தப்பிதமாய் வாசிக்கும்பக்ஷத்தில், உபாத்தியாயர் அவர்களைத் திருத்திச் சரியான பிரகாரம் வாசித்து மாதிரி காட்டவேண்டும். சத்தமாய் வாசிக்கத் தெரிந்தபின் மௌனமாக வாசிக்கவும் பிள்ளைகள் பழகவேண்டும்.

6. கடின பதங்களுக்குப் பிள்ளைகளிடத்திலிருந்தே அர்த்தத்தை வருவிக்கப் பிரயாசப்படவேண்டும். அர்த்தத்தை வருவித்தபின் அதைக் கறுப்புப்பலகையில் எழுதிக் காட்டவேண்டும்.

7. பாடங்களின் இறுதியில் கொடுத்திருக்கும் அப்பியாசங்களை நடத்துவதுமன்றி, அவைபோன்ற இன்னும் பல அப்பியாசங்களையும் உபாத்தியாயர் தயார் செய்து போதிக்கவேண்டும். பிள்ளைகள் நன்ருய் எழுதும்படியாகவும், அவர்களுடைய எழுத்துக்கள் சுத்தமாயும் அழகாயும் இருக்கும்படியாகவும் உபாத்தியாயர் கவனித்துக்கொள்ள வேண்டும்.

8. பிள்ளைகளுக்குப் படிப்பில் உற்சாகமும் சந்தோஷமுமுண்டாகும்பொருட்டும், இயற்கையறிவு விர்த்தியாகும்பொருட்டும், ஒவ்வொரு பாடத்துக்கும் சம்பந்தமான கிண்டர்கார்ட்டன் தொழில்கள், சித்திரம் வரைதல், கதை, பாட்டு, ஆட்டம் முதலிய விஷயங்களும் கற்பிக்கவேண்டும்.

9. உபாத்தியாயர் ஒவ்வொரு பாடத்தையும் முன்னதாகவே வாசித்து, தயார் செய்து அதற்குப் பாடக் குறிப்புகள் எழுதிவைத்துக் கொண்டு போதிக்கவேண்டும். உபாத்தியாயரிடத்தில் நல்ல தமிழ் அகராதி ஒன்று இருக்கவேண்டும்.

10. பிள்ளைகள் நல்லொழுக்க முறைகளை அனுசரிப்பதற்கு எதுவாக உபாத்தியாயர் தன் சம்பாஷணையையும், நடக்கையையும் வெகு ஜாக்கிரதையாய் சீர்ப்படுத்திக்கொள்ளவேண்டும்.

1375

பொருள் அடக்கம்

பாடம்		பக்கம்
1.	அணில்	1
2.	ஆடு	2
3.	இளநீர்	3
4.	ஈச்சமரம்	4
5.	உரலும் உலக்கையும்	5
6.	ஊசி	6
	அப்பியாசம் 1.	7
7.	எலி	8
8.	ஏணி	9
9.	ஐந்து விரல்கள்	10
10.	ஒட்டியாணம்	11
11.	ஓணான்	12
12.	ஔவையார்	13
13.	எஃகினால் செய்த ஆயுதங்கள்	14
	அப்பியாசம் 2.	15
14.	கப்பல்	16
15.	காற்றாடி	17
16.	சிலந்தி	18
17.	தீக்குருவி	19
18.	உடலின் உறுப்புகள்	20
	அப்பியாசம் 3.	21
19.	கூத்தாடி	22
20.	பூனை	23
21.	ரூபாய்	24
22.	நூல்	25
	அப்பியாசம் 4.	26
23.	தென்னமரம்	27
24.	தேரை	28
25.	யானை	29

பாடம்		பக்கம்
26.	நொண்டி	30
27.	மோட்டார் வண்டி	31
28.	வெளவால்...	32
29.	தொழிலாளிகள்	33
	அப்பியாசம் 5.	34
30.	பேசும் விதம்	35
	அப்பியாசம் 6.	36
31.	வாசிக்கும் விதம்	37
	அப்பியாசம் 7.	39
32.	எழுதும் விதம்	40
	அப்பியாசம் 8.	42
33.	நாள்—வாரம்	44
	அப்பியாசம் 9.	46
34.	காகம்	47
	அப்பியாசம் 10.	49
35.	நன்றியுள்ள நாய்	50
	அப்பியாசம் 11.	51
36.	நிலா	52
	அப்பியாசம் 12.	53
37.	கடை வீதி...	54
	அப்பியாசம் 13.	58
38.	கடிதம் எழுதுதல்	59
	அப்பியாசம் 14.	60
39.	மாம்பழம்	61
	அப்பியாசம் 15.	62
40.	வேத வாக்கியங்கள்	64
	அப்பியாசம் 16.	65
	செய்யுள்—உலகநீதி	66
	செய்யுள் பாகத்தின் அரும்பத விளக்க உரை	69

இராஜ வாழ்த்துக் கீதம்

1. ஆண்டவா, எங்களை
ஆளும் நல்வேந்தனை
காத்தருளும்.
எங்கெங்கும் வெற்றியும்,
மங்கா நற் கீர்த்தியும்,
செங்கோல் நீள் ஆட்சியும்,
அருள் செய்யும்.

2. அருட் பிரகாசமும்,
பொருள், தீர்க்காயுளும்
ஈந்தருளும்.
அரச னென்றைக்கும்
தருமம் காக்கவும்,
ப்ரஜைகள் வாழவும்,
அருள் செய்யும்.

தமிழ்

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

வட மொழி

ஜ்	ஜ	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ
ஸ்	ஸ	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ
ஷ்	ஷ	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ
க்ஷ்	க்ஷ	க்ஷா	க்ஷி	க்ஷீ	க்ஷு	க்ஷூ
ஹ்	ஹ	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ

எழுத்துக்கள்

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

எழுத்துக்கள்

ஜெ	ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜௌ
ஸெ	ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸௌ
ஷெ	ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷௌ
க்ஷெ	க்ஷே	க்ஷை	க்ஷொ	க்ஷோ	க்ஷௌ
ஹெ	ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹௌ

இரண்டாம் புத்தகம்

1. அணில்

அணில்பிள்ளை	மயிர்
முதுகில்	அடர்ந்த
மூன்று	உயர்த்தி
சாம்பல்	ஓடும்

1. அணில் அழகான ஒரு சிறு பிராணி.

2. அதற்கு அணில்பிள்ளை என்றும் பெயர்.

3. அது மரங்களில் வசிக்கும்.

4. அது சாம்பல் நிறமாய் இருக்கும்.

5. அதற்கு மயிர் அடர்ந்த வால் இருக்கிறது.

6. அது வாலை உயர்த்திக்கொண்டு அங்கும் இங்கும் ஓடும். தீனி தேடித் தின்னும்.

7. அணிலின் முதுகில் மூன்று வெள்ளைக் கோடுகள் உண்டு. அவை அழகாய் இருக்கும்.

2. ஆடு

வளர்க்கிற	அருகில்
சாதுவான	தழை
மிருகம்	அன்பாய்

1. ஆடு நாம் வீட்டில் வளர்க்கிற ஒரு சாதுவான மிருகம்.

2. சிறு பிள்ளைகளும் அதன் அருகில் போகலாம். அது அவர்களோடு விளையாடும். நாம் கையால் ஆட்டுக்குத் தீனி கொடுக்கலாம்.

3. ஆட்டுக்கு முக்கியமான ஆகாரம் புல். பலவிதமான தழைகளையும் ஆடு மேயும்.

4. நாம் ஆடுகள் இடத்தில் அன்பாய் இருக்க வேண்டும்.

3. இளநீர்

இளங்காய்	தாகம்
முற்றின காய்	தணிக்கும்
தேங்காய்	வெயில்
இனிய	வழிப்போக்கர்
பானம்	வழுக்கை

1. தென்ன மரத்தின் இளங்காய்க்கு இளநீர் என்று பெயர். முற்றின காய் தேங்காய்.

2. இளநீர் ஓர் இனிய பானம். அது சூட்டைத் தணிக்கும். வெயில் காலத்தில் இளநீர் குடிக்க யாவரும் விரும்புவார்கள். முக்கியமாய் வெயிலில் நடக்கும் வழிப்போக்கர் தாகத்துக்கு இளநீர் வாங்கிக் குடிப்பார்கள்.

3. அதற்குள் இருக்கும் வழுக்கை சிறு பிள்ளைகளுக்கு அதிகப் பிரியம்.



4. ஈச்சமரம்

கிளை	பின்னலாம்
ஓலை	முடையலாம்
குலை	கலியாணம்
கூடை	தித்திப்பாய்

1. ஈச்சமரம் தென்னை மரத்தைப் போல் உயர்ந்து, நீண்டு வளரும். அதற்குக் கிளைகள் இல்லை.

2. ஈச்சமரத்தின் ஓலையால் பாய் பின்னலாம், கூடைகளும் முடையலாம்.

3. ஈச்சங் குலைகளைக் கலியாணப் பந்தலில் கட்டுவார்கள். தென்னங்குலைகளையும் அவைகளோடு சேர்த்துக் கட்டுவது உண்டு. அவை பார்க்க அழகாய் இருக்கும்.

4. ஈச்சம் பழம் தித்திப்பாய் இருக்கும்.



5. உரலும் உலக்கையும்

உலக்கை	அரிசி
முதலியவை	நெல்
நீண்டு	குத்த
உருண்டு	மாவு
குட்டை	இடிக்க

1. உரல்களில் பலவிதம் உண்டு. அவை கல் உரல், மர உரல், இரும்பு உரல் முதலியவை.

2. கல் உரல் கல்லால் செய்யப்பட்டது. மர உரல் மரத்தால் செய்யப்பட்டது. இரும்பு உரல் இரும்பால் செய்தது.

3. மர உலக்கை நீண்டு, உருண்டு இருக்கும். இரும்பு உலக்கை குட்டையாய் இருக்கும். மர உலக்கையின் பூண் இரும்பால் ஆனது. நெல் குத்தவும், அரிசி தீட்டவும், மாவு இடிக்கவும் உரல் உதவும்.

6. ஊசி

ஊசி	கிடையாது
நுனி	தைக்க
கோத்து	உதவாது
கோணி	தையல்
காது	கற்றுக்கொள்

1. ஊசி இரும்பினால் செய்யப்பட்டது.

2. ஊசியின் நுனி அதிக கூரானது.

3. ஊசியில் நூல் கோத்து இருக்கிறது.

4. துணி தைக்க ஊசியும் நூலும் வேண்டும். துணி தைக்கும் ஊசி சிறிதாய் இருக்கும். கோணி தைக்கும் ஊசி பெரிதாய் இருக்கும்; அதற்குக் கோணி ஊசி என்று பெயர்.

5. குண்டூசிக்கு காது கிடையாது. அது தைக்க உதவாது.

6. நாம் தையல் கற்றுக்கொள்ளலாம்.

அப்பியாசம் 1

1. இவற்றை மௌனமாகப் படித்து எழுது:—

    1. அணில் பிள்ளை.
    2. ஆட்டுக்குட்டி.
    3. இளநீர்.
    4. ஈச்சம்பாய்.
    5. உலக்கைப் பூண்.
    6. ஊசி நூல்.

2. இவற்றைச் சத்தமாய்ப் படி.—

    1. ஆடு தழை தின்னும்.
    2. ஆடு தலையை ஆட்டும்.
    3. ஈச்சம் பழம்.
    4. கால் பலம்.
    5. சலம் நெல் களத்தில் இருக்கிறது.

3. கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தை வைத்து வாசி:—

    1. அணில் —— நிறமாய் இருக்கும்.
    2. தென்னமரத்தின் இளங்காய்க்கு —— என்று பெயர்.
    3. ஈச்சமரத்தின் ஓலையால் பாய் ——, கூடைகள் —— .
    4. உலக்கை நெல் —— வும், அரிசி —— வும், மாவு ——வும் உதவும்.



7. எலி

கீச் கீச்	ஏனென்றால்
பயந்து	வெண்மை
கொன்று	சிறியவை
தின்றுவிடும்	தின்பண்டங்கள்

1. எலி வீட்டிலும் காட்டிலும் வசிக்கும். அது கீச், கீச் என்று கத்தும்.

2. பூனையைக் கண்டால் எலி பயந்து ஓடும். ஏனென்றால், பூனை எலிகளைப் பிடித்துக் கொன்று தின்றுவிடும்.

3. எலிகளில் பலவகை உண்டு. சில எலிகள் வெண்மையாயும், சில எலிகள் கறுப்பாயும் இருக்கும். சில சிறியவையாயும் சில பெரியவையாயும் இருக்கும்.

4. நமது வீடுகளில் வசிக்கும் எலிகளுக்கு நமது வீடுகளில் இருக்கும் தானியங்களும் தின்பண்டங்களுமே ஆகாரம்.

8. ஏணி



நெடுஞ் சட்டம்
குறுஞ் சட்டம்
இடையில்
விளக்கு
அவசியம்
கட்டடங்கள்
ஏறிக்கொண்டு
தேறிக்கொண்டு
நிலைமை
இஷ்டமா?

1. இது ஒரு ஏணியின் படம்.

2. ஏணியில் இரண்டு நெடுஞ் சட்டங்களும், சில குறுஞ் சட்டங்களும் இருக்கின்றன.

3. இடையில் இருக்கும் ஒவ்வொரு சிறு சட்டத்துக்கும் படி என்று பேர். இந்த ஏணிக்கு ஏழு படிகள் இருக்கின்றன.

4. உயர்ந்த கட்டடங்களில் வேலை செய்கிறவர்களுக்கு ஏணி அவசியம் வேண்டும்.

5. தெருக்களில் விளக்குப் போடுகிறவன் இடத்திலும் ஒரு சிறு ஏணி இருக்கும்.

6. ஏணியில் படிப்படியாய் ஏறிக்கொண்டு போனால் உச்சியில் போய்ச் சேரலாம்.

7. அதுபோலவே கல்வியில் படிப்படியாய் தேறிக்கொண்டு போனால் நாம் உயர்ந்த நிலைமைக்கு வரலாம். இது உனக்கு இஷ்டமா?

9. ஐந்து விரல்கள்

கையில்
பெருவிரல்
தடித்து
சுட்டுவிரல்
ஆள்காட்டி விரல்
மூன்றும்
நடுவிரல்
பாம்பு விரல்
மோதிர விரல்
சுண்டு விரல்

1. கையில் நமக்கு ஐந்து விரல்கள் உண்டு.

2. முதல் விரலுக்குப் பெருவிரல் என்று பெயர். இது குட்டையாய்த் தடித்து இருக்கும்.

3. இரண்டாம் விரலைச் சுட்டுவிரல் என்றும் ஆள்காட்டி விரல் என்றும் சொல்லுவார்கள்.

4. மூன்றும் விரல் நடுவிரல் என்றும் பாம்பு விரல் என்றும் சொல்லப்படும்.

5. நான்காம் விரல் மோதிர விரல்.

6. ஐந்தாம் விரல் சுண்டு விரல். இது சிறிதாய் இருக்கும்.

7. ஒவ்வொரு விரலின் நுனியிலும் நகம் உண்டு. நாம் நகங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.



10. ஒட்டியாணம்

இடுப்பில்	தட்டான்
அணிந்து	பூ
ஒட்டிக்கொண்டு	சலங்கை
ஆபரணம்	இரத்தினக் கற்கள்
வெள்ளி	பதித்திருக்கும்

1. ஒட்டியாணம் பெண்கள் இடுப்பில் அணிந்துகொள்ளுகிற ஓர் ஆபரணம். அது அவர்கள் இடுப்பில் ஒட்டிக்கொண்டிருக்கும்.

2. வெள்ளியினுலாவது தங்கத்தினுலாவது ஒட்டியாணம் செய்வது வழக்கம். வெள்ளி ஒட்டியாணத்தைவிட தங்க ஒட்டியாணம் அதிக விலைபெறும். ஒட்டியாணம் செய்பவன் தட்டான்.

3. சில ஒட்டியாணங்களில் பலவிதமான பூ வேலைகள் செய்திருக்கும். மற்றும் சில ஒட்டியாணங்களில் சலங்கைகள் இருக்கும். அவை அழகாய் இருக்கும். சில தங்க ஒட்டியாணங்களில் இரத்தினக் கற்களும் பதித்திருக்கும்.



11. ஓணான்

தோட்டம்	ஒடிந்து	பல்லி
வேலி	திரும்ப	புழு
வேகம்	முளைக்கும்	முட்டை
நீளம்	வண்டு	ஜெந்து
தடிப்பாய்	பருந்து	ஊரும் பிராணி

1. ஓணான் நமது தோட்டங்களில் காணப்படும் ஓர் ஊரும் பிராணி. அதை வேலிகளில் காணலாம். அது வெகு வேகமாக ஓடும்.

2. ஓணானுக்கு வால் வெகு நீளம். அதன் வால் தடிப்பாய் இருக்கும். ஒடிந்துபோனால் திரும்பவும் முளைக்கும்.

3. ஓணான் வண்டு, பல்லி, புழு முதலிய ஜெந்துக்களை பிடித்துத் தின்னும்.

4. ஓணானை பாம்பு, பருந்து முதலிய ஜெந்துக்கள் பிடித்துத் தின்னும்.

5. பல்லி, பாம்பு முதலிய ஊரும் பிராணிகளைப்போல் ஓணானும் முட்டையிடும்.

12. ஔவையார்

தமிழ்	எழுதிய	ஒழியேல்
நாட்டில்	புகழ்ந்து	அருளிச்செய்த
கல்வி	வகுப்பு	நீதிவாக்கியம்
சிறந்த	நூல்கள்	நிறுத்த
அம்மை	ஓதுவது	கூடாது

1. ஔவையார் தமிழ் நாட்டில் கல்வியில் சிறந்த ஓர் அம்மை.

2. ஔவையார் எழுதிய புத்தகங்களை எல்லோரும் புகழ்ந்து படிக்கிறார்கள்.

3. நாம் மேல் வகுப்புக்குப் போகும்போது ஔவையார் எழுதிய நூல்களைப் படிக்கலாம்.

4. 'ஓதுவது ஒழியேல்' என்பது ஔவையார் அருளிச் செய்த ஒரு நீதி வாக்கியம்.

5. நாம் படிப்பை எந்தக் காலத்திலும் நிறுத்தக் கூடாது. எப்பொழுதும் படித்துக்கொண்டேயிருக்கவேண்டும்.



13. எஃகினல் செய்த ஆயுதங்கள்

உருக்கு	துரு
உளி	மழுங்கி
கத்தரிக்கோல்	சவரக்கத்தி
கூர்மை	சாமான்கள்
ஆயுதங்கள்	கொல்லன்

1. எஃகு நல்ல இரும்பிலிருந்து செய்யப்படுகிறது. அதற்கு உருக்கு என்றும் பெயர்.

2. கத்தி, கத்தரிக்கோல், உளி முதலிய கூர்மையான ஆயுதங்கள் எஃகினல் செய்யப்படுகின்றன.

3. எஃகினல் செய்யப்பட்ட ஆயுதங்கள் தீட்டத் தீட்ட மிகவும் கூர்மையாகும். கத்தியைத் தீட்டாமல் வைத்திருந்தால், துருப் பிடித்து மழுங்கிப் போகும்.

4. சவரக் கத்தி எஃகினல் செய்தது. கத்தி முதலிய இரும்புச் சாமான்களைக் கருமான் செய்வான். கருமானைக் கொல்லன் என்றும் சொல்லுவார்கள்.

அப்பியாசம் 2

1. இவற்றை மௌனமாகப் படித்து எழுது:—

   1. எலி வளை.
   2. எழு படிகள்.
   3. ஐந்து விரல்கள்.
   4. தங்க ஒட்டியாணம்.
   5. ஓணான் முட்டை.
   6. ஔவைக் கிழவி.
   7. எஃகு என்பது உருக்கு.

2. இவற்றைச் சத்தமாய்ப் படி:—

   1. நெடுஞ் சட்டம்; குறுஞ் சட்டம்.
   2. பெருவிரல்; சுட்டுவிரல்; சுண்டுவிரல்.
   3. பல்லி, பருந்து, பாம்பு, ஓணான்.
   4. ஓதுவது ஒழியேல்.
   5. சவரக்கத்தி எஃகினால் செய்தது.

3. கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தை வைத்து வாசி:—

   1. எலி —— என்று கத்தும்.
   2. எலிகளைப் —— பிடித்துத் தின்னும்.
   3. நான்காம் விரல் —— விரல்.
   4. விரலின் நுனியில் இருப்பது ——.
   5. ஒட்டியாணம் செய்பவன் ——.
   6. கத்தி செய்பவன் ——.



14. கப்பல்

மிதந்து	நீராவி	புகைக்கப்பல்
செல்லும்	சக்தி	விருத்தி
தரை	பிரயாணம்	தேசம்
சமுத்திரம்	வியாபாரம்	கஷ்டம்

1. கப்பல் கடலிலே மிதந்து செல்லும்.

2. நீ கப்பல் பார்த்திருக்கிருயா?

3. வண்டி தரையில் ஓடுவதுபோல், கப்பல் சமுத்திரத்தில் வெகு வேகமாய் ஓடும். கப்பல்களில் பலவிதம் உண்டு. பாய்க்கப்பல் காற்றின் வேகத்தால் ஓடும். புகைக் கப்பல் புகை வண்டியைப்போல் நீராவியின் சக்தியால் ஓடும்.

4. கப்பல் இல்லாவிட்டால் சமுத்திரத்தில் பிரயாணம் செய்வது கஷ்டம்.

5. கப்பல்கள் ஒரு தேசத்தில் இருந்து மற்ருெரு தேசத்துக்கு பலவிதமான சாமான்களை ஏற்றிக்கொண்டு போகும். அதனுல் வியாபாரம் விருத்தியாகிறது.

15. காற்ருடி

கடை
காற்ருடி
வாங்கினுன்
காற்று
காகிதம்
கயிற்றினுல்
பறக்கும்
பாடசாலை
தொந்தரவு
செய்யான்



கடையில் கால் அணுவுக்கு கந்தன் ஒரு காற்ருடி வாங்கினுன். அந்தக் காற்ருடி காகிதத்தால் செய்த அழகான காற்ருடி. காற்ருடிக்கு வால் கட்டியிருக்கிறது. காற்றில் கயிற்றினுல் காற்ருடி உயரமாய்ப் பறக்கும். காற்று இல்லாவிட்டால் காற்ருடி உயரமாய்ப் பறக்காது.

பாடசாலை முடிந்தபின் கந்தன் காற்ருடி விடுவான். பாடசாலை நேரத்தில் விளையாடமாட்டான். தொந்தரவும் செய்யான்.



16. சிலந்தி

எட்டுக்கால்	நடுவில்
எண்ணிப்பார்	வேண்டிய
வலை	வயிற்றில்
கூடு	சிக்கி
கட்டி	ஈப்புலி

சிலந்தி என்பது ஒரு விதப் பூச்சி. சிலந்திப் பூச்சிக்கு எட்டுக் கால்கள் உண்டு. கால்களை எண்ணிப் பார். சிலந்தி தன் நூலினால் வட்டமாக வலைபோல் கூடுகட்டி அதன் நடுவில் வசிக்கும். படத்தைப் பார்.

கூடு கட்டுவதற்கு வேண்டிய நூல் அதன் வயிற்றில் இருந்தே வருகிறது. சிலந்தி தன் வலையில் சிக்கிக்கொள்ளும் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். தோட்டங்களிலும், வீடுகளிலும் சிலந்திப் பூச்சிகளை நாம் பார்க்கலாம். சிலந்திப் பூச்சியைச் சில இடங்களில் ஈப்புலி என்றும் சொல்லுவார்கள்.

17. தீக்குருவி

கழுத்து
நீளமாய்
குதிரை
சவாரி
உறுதி
ஒட்டகப்பறவை
மனுஷன்
ஆகையால்
இறக்கை
மிருது

படத்தில் இருக்கும் பட்சிக்கு தீக்குருவி என்று பெயர். தீக்குருவிக்கு ஒட்டகத்தைப்போல் கழுத்து நீளமாய் இருக்கும். ஆகையால் தீக்குருவியை ஒட்டகப் பறவை என்றும் சொல்லுவார்கள்.

தீக்குருவியின் கால்கள் நீண்டு உறுதியாய் இருக்கும். அது குதிரையைவிட வேகமாய் ஓடும். அதன்மேல் ஒரு மனுஷன் ஏறிச் சவாரி செய்யலாம்.

தீக்குருவியின் இறக்கைகள் குட்டையாய் இருக்கும். ஆகையால் அதற்கு மற்றப் பட்சிகளைப் போல் பறக்க முடிகிறதில்லை. தீக்குருவியின் இறகுகள் வெகு அழகாயும் மிருதுவாயும் இருக்கும்.

18. உடலின் உறுப்புகள்



தலை
நெற்றி
நாக்கு
வயிறு
உதடு
காது
அவயவங்கள்
புருவங்கள்
துவாரங்கள்
பார்க்கிறோம்
கேட்கிறோம்
அறிகிறோம்

நமக்குத் தலை ஒன்று; நெற்றி ஒன்று; மூக்கு ஒன்று; நாக்கு ஒன்று; வாய் ஒன்று; கழுத்து ஒன்று; வயிறு ஒன்று; கண்கள் இரண்டு; புருவங்கள் இரண்டு; மூக்குத் துவாரங்கள் இரண்டு; உதடுகள் இரண்டு; காதுகள் இரண்டு; கன்னங்கள் இரண்டு; கைகள் இரண்டு; கால்கள் இரண்டு.

நாம் கண்களால் பார்க்கிறோம்; காதுகளால் கேட்கிறோம்; நாக்கினால் ருசி அறிகிறோம்; மூக்கினால் வாசனை அறிகிறோம்; கைகளால் பொருள்களைத் தொட்டு உணர்ந்து கொள்ளு-கிறோம். நாம் நமது அவயவங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

அப்பியாசம் 3

1. இவற்றை மௌனமாகப் படித்து எழுது:—

    1. காற்ருடி கால் அணு.
    2. சிலந்திக்கு எட்டுக்கால்.
    3. தீக்குருவியின் இறகு அழகானது.
    4. நமக்கு வயிறு ஒன்று; கழுத்து ஒன்று; காதுகள் இரண்டு; புருவங்கள் இரண்டு.

2. இவற்றைச் சத்தமாய்ப் படி:—

    1. மற்ருெரு தேசம்.
    2. காற்ருடி காற்றில் கயிற்றினுல் பறக்கும்.
    3. நமக்கு நெற்றி ஒன்று.
    4. சிலந்திப்பூச்சியின் வயிற்றிலிருந்து நூல் வருகிறது.
    5. சிலந்தியை ஈப்புலி என்றும் சொல்லுவார்கள்.

3. கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தை வைத்து வாசி:—

    1. சிலந்திக் கூடு வட்டமான —— போல் இருக்கும்.
    2. தீக்குருவி —— யைவிட வேகமாய் ஓடும்.
    3. மூக்கினுல் —— அறிகிருேம்.
    4. நாக்கினுல் —— அறிகிருேம்.

19. கூத்தாடி

நடை	கும்பலாய்
உடை	கூடுவார்கள்
வேடிக்கை	மூங்கில்
கூத்து	கழி
ஜனங்கள்	கழைக்கூத்தாடி

கூத்தாடியின் நடையும், உடையும், பேச்சும் வெகு வேடிக்கையாய் இருக்கும். கூத்தாடி ஊர் ஊராய்ப் போய் பாட்டுப்பாடி, ஆட்டம் ஆடுவான். கூத்தாடியின் கூத்தைப் பார்க்க ஜனங்கள் கும்பலாய்க் கூடுவார்கள்.

உற்சவ காலங்களில் பல கூத்தாடிகளைப் பார்க்கலாம். சில கூத்தாடிகள் மூங்கில் கழிகளில் ஏறி ஆடுவார்கள். அவர்களுக்குக் கழைக் கூத்தாடிகள் என்று பெயர்.



20. பூனை

முன்னங்கால்	தினந்தோறும்	கந்தை
உடம்பை	உதிக்கும்	கசக்கி
துடைத்து	துலக்கி	கூழ்
சுத்தமாய்	கழுவு	குளித்து
பழகவேண்டும்	துவைத்து	குடி

இது ஒரு பூனையின் படம். இந்தப் பூனை என்ன செய்கிறது? அது தன் முன்னங் காலால் முகத்தை துடைத்துக் கொள்ளுகிறது. பூனை எப்போதும் தன் உடம்பைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளும். அதுபோல நாமும் எப்பொழுதும் சுத்தமாய் இருக்கப் பழகவேண்டும்.

தினந்தோறும் காலையில் எழுந்து, சூரியன் உதிக்குமுன் பல் துலக்கி, முகத்தைக் கழுவுவது நல்ல வழக்கம். நாள்தோறும் துணி துவைத்துக் குளிக்க வேண்டும். "கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழ் ஆனாலும் குளித்துக் குடி."



21. ரூபாய்

நாணயம்	கணீர்
அச்சடித்து	செல்லாத
இந்தியா	சுண்டி
வருஷம்	ஏமாற்ற

ரூபாய் வெள்ளியினுல் செய்யப்பட்ட ஒரு நாணயம். அது வெண்மை நிறமாயும் வட்டமாயும் இருக்கும். ரூபாயின் ஒரு பக்கத்தில் அரசன் ரூபமும் அவர் பெயரும் அச்சடித்து இருக்கும். அதன் மறுபக்கத்தில், ஒரு ரூபாய் என்றும், இந்தியா என்றும் எழுதியிருக்கும். ரூபாய் போடப்பட்ட வருஷமும் அதில் இருக்கும்.

ரூபாயைக் கல்லின்மேல் போட்டால் கணீர் என்று சத்தம் கேட்கும். சத்தம் குறைவாய் இருந்தால் அதைச் செல்லாத ரூபாய் என்று சொல்லுவார்கள். ரூபாயை எப்பொழுதும் கல்லில் தட்டியாவது, விரல்களால் சுண்டிப் பார்த்தாவது, வாங்கவேண்டும். செல்லாத ரூபாய்களை நல்ல ரூபாய்கள் என்று சொல்லி, மற்றவர்களிடத்தில் கொடுத்து, நாம் அவர்களை ஏமாற்றக்கூடாது.



22. நூல்

நெய்யப்பட்டது	பஞ்சு
நூற்கப்படுகிறது	பருத்தி
இயந்திரம்	தினுசு
இராட்டினம்	முரட்டு

நாம் கட்டியிருக்கும் துணி நூலினுல் நெய்யப்பட்டது. நூல் பஞ்சிலிருந்து நூற்கப்படுகிறது. பஞ்சு பருத்தி என்னும் செடியிலிருந்து உண்டாகிறது. நீ பருத்திச்செடி பார்த்திருக்கிருயா? பஞ்சு வெண்மை நிறமாய் இருக்கும்.

நூலில் சில தினுசுகள் தடிப்பாகவும், சில மெல்லியதாகவும் இருக்கும். தடித்த நூலினுல் முரட்டுத் துணிகள் நெய்வார்கள். மெல்லிய நூலினுல் நாணயமான துணி நெய்யப்படுகிறது. நூல் நூற்கிறதற்குச் சில யந்திரங்கள் உண்டு. நீ அவைகளேப் பார்க்கவேண்டும். நமது நாட்டில் நூல் நூற்கும் இயந்திரத்துக்கு இராட்டினம் என்று பெயர்.

அப்பியாசம் 4

1. இவற்றை மௌனமாகப் படித்து எழுது:—

    1. கூத்துப் பார்க்கும் கும்பல்.
    2. பூனை எலி பிடிக்கும்.
    3. ரூபாய்க்குப் பதினாறு அணா.
    4. நூல் நூற்கும் இயந்திரம் இராட்டினம்.

2. இவற்றைச் சத்தமாய்ப் படி:—

    1. தீக்குருவிக்கு ஒட்டகப் பறவை என்று பெயர்.
    2. கழைக்கூத்தாடிகள் மூங்கில் கழிகளில் ஏறி கூத்தாடுவார்கள்.
    3. கூழ் ஆனாலும் குளித்துக் குடி.
    4. ரூபாயைக் கல்லில் தட்டிப் பார்.
    5. நூல் பஞ்சிலிருந்து நூற்கப்படுகிறது.

3. கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தை வைத்து வாசி:—

    1. கூத்தாடி —— பாடி —— ஆடுவான்.
    2. கந்தையானாலும் —— கட்டு.
    3. ரூபாய் —— நிறமாய் இருக்கும்.
    4. பஞ்சு —— என்னும் செடியிலிருந்து உண்டாகிறது.
    5. நூலினால் துணி ——.



23. தென்னமரம்

தென்னை	உபயோகம்
தெங்கு	கறிபதார்த்தங்கள்
மதுரம்	பலகாரங்கள்
கீற்று	வேய்வார்கள்

தென்ன மரத்துக்குக் கிளைகள் இல்லை. உச்சியில் மாத்திரம் ஓலைகள் இருக்கும். தென்ன மரத்தைத் தென்னை என்றும் தெங்கு என்றும் சொல்லுவார்கள்.

தென்னை நமக்கு மிகவும் உபயோகமான மரம். அதன் உபயோகம் என்ன? இளநீர் வெகு மதுரமாய் இருக்கும். தேங்காய் கறிபதார்த்தங்களுக்கும், பலகாரங்களுக்கும் உபயோகப் படும். முற்றின தேங்காயிலிருந்து எண்ணெய் எடுப்பார்கள். ஓலைகளைக் கீற்றுகளாகப் பின்னி, வீடு வேய்வார்கள்.



24. தேரை

சொறி	ஒளித்திருக்கும்
நன்ருய்	பொழுது
நீந்த	தத்தித்தத்தி
கற்களின்	படியளக்கிருர்

தேரை தவளையைப்போல் இருக்கும். தேரையின் உடம்பு சொறி பிடித்ததுபோல் இருக்கும். நீ தேரையைப் பார்த்தது உண்டா?

தேரை தரையில் வசிக்கும். தவளை தண்ணீரில் வசிக்கும். தேரைக்குத் தண்ணீரில் தவளையைப்போல் நன்ருய் நீந்த முடியாது.

தேரை பகலில் ஈரமான இடங்களிலும், கற்களின் இடையிலும், ஒளித்திருக்கும். பொழுது போனதும் ஆகாரம் தேட வெளியே வந்து தத்தித்தத்திச் செல்லும்.

தேரை பூச்சி புழுக்களைத் தின்னும். "கல்லினுள் தேரைக்கும் கடவுள் படியளக்கிருர்" என்று ஜனங்கள் சொல்வது வழக்கம்.



25. யானை

பெரியது	சிமிழ்
தும்பிக்கை	சீப்பு
முன்னம் பற்கள்	கத்திப்பிடி
கனமானவை	உதவுகின்றது

மிருகங்களில் மிகவும் பெரியது யானை. அதன் தலையும் உடலும் மிகப் பெரியவை. கால்களும் கனமானவை. கண்களோ சிறியவை. அதன் முதுகில் ஐந்து ஆறு பேர் ஏறிச் சவாரி செய்யலாம்.

மற்ற மிருகங்களுக்கு இல்லாத ஓர் உறுப்பு யானைக்கு உண்டு. அந்த உறுப்புக்குத் தும்பிக்கை என்று பெயர். அது யானைக்கு கையாக உதவு கின்றது.

யானைக்கு இரண்டு முன்னம் பற்கள் உண்டு. அவைகள் தந்தம் எனப்படும். தந்தத்தினால் சிறு சிமிழ்கள், சீப்புகள், கத்திப்பிடிகள் முதலிய சாமான்கள் செய்கிறார்கள்.



26. நொண்டி

நொண்டி	ஊன்றிக்கொண்டு
நிமிர்ந்து	கேலி
நேராய்	சிரிப்பது
சாதாரணமாய்	பிசகு

நொண்டிக்குக் கால் முடமாய் இருக்கும். படத்தில் நிற்கும் மனிதனுக்கு ஒரு கால் முடம். மற்ருென்று நல்ல கால். அவன் நிமிர்ந்து நேராய் நடக்கமாட்டான். முடவர்கள் சாதாரணமாய் கோல் ஊன்றிக்கொண்டு நடப்பார்கள். அவர்களில் சிலர் மரத்தினுல் கால் செய்து போட்டுக்கொண்டும் நடப்பார்கள்.

நொண்டியாய் இருப்பவர்களுக்கு நாம் உதவி செய்யவேண்டும். அவர்களைப் பார்த்து கேலியாய்ப் பேசுவதும், சிரிப்பதும் பிசகு.



27. மோட்டார் வண்டி

மோட்டார்	தண்டவாளக்கம்பி
ஓடுவதற்கு	முன்னோர்
மண்ணெண்ணெய்	குறைந்துபோயின

இது ஒரு மோட்டார் வண்டி. மோட்டார் வண்டி ஓடுவதற்கு மாடாவது குதிரையாவது கட்டவேண்டிய அவசியம் இல்லை. அது ஒருவித யந்திர வண்டி. அந்த வண்டி மண்ணெண்ணெ-யின் உதவியால் புகை வண்டியைப்போல் வேக-மாய் ஓடும்.

புகை வண்டி தண்டவாளக் கம்பிகளின்-மேல் ஓடும். மோட்டார் வண்டியோ சாதாரண வீதிகளில் ஓடக்கூடியது. மோட்டார் வண்டிகள் வந்தபின், நமது முன்னோருடைய மாட்டு வண்டி-களும் குதிரை வண்டிகளும் குறைந்துபோயின.

28. வௌவால்

விநோதமான பற்றிக்கொண்டு துரிஞ்சில்
சிறகு தலைகீழாய் பழம் தின்னி

வௌவால் ஒரு விநோதமான பிராணி. அதன் தலையையும் உடலையும் பார்த்தால் அது ஒரு சுண்டெலிபோல் காணப்படும். வௌவால் பறந்து செல்வதைப் பார்த்தால் அது ஒரு பட்சி-போல் காணப்படும். வௌவாலின் சிறகுகள் மெல்லிய தோலைப்போல் இருக்கும். நீ அதைப் பார்த்தது உண்டோ?

வௌவால் இரவில் அங்கும் இங்கும் பறந்து இரை தேடப்போகும். அது பல பழங்களையும் பூச்சி புழுக்களையும் தின்னும். வௌவால் பகலில் தூங்கும். அது தன் கால் விரல்களால் மரத்தைப் பற்றிக்கொண்டு தலை கீழாய்த் தொங்கும்.

வௌவால்களில் துரிஞ்சில் என்றும் பழம் தின்னி வௌவால் என்றும் இருவகை உண்டு.



29. தொழிலாளிகள்

தொழிலாளி	பக்ஷிகள்
ஔஷதம்	வஸ்திரம்
ஸாரதி	கிருஷிகன்
வாஹனம்	ஜீவிப்பான்

கருமான் இரும்பு ஸாமான்கள் செய்வான். வைத்தியன் ஔஷதம் கொடுப்பான். ஸாரதி வாஹனம் ஓட்டுவான். வேடன் பக்ஷிகள் பிடிப்பான். வண்ணான் வஸ்திரம் வெளுப்பான். கிருஷிகன் பயிரிட்டு ஜீவிப்பான்.

உலகத்தில் உள்ள ஸமஸ்த ஜாதி ஜனங்களும் வெவ்வேறு தொழில்கள் செய்த போதிலும் ஸகலரும் நமக்கு ஸஹோதரரே. ஆகையால் நாம் யாவரையும் சகோதரராகப் பாவித்து அவர்களைச் சிநேகிக்கவேண்டும்.

அப்பியாசம் 5

1. இக்கேள்விகளை மௌனமாகப் படித்து ஒரு வார்த்தையில் விடை எழுது:—
   1. கிளைகள் இல்லாத ஒரு மரத்தின் பெயர் எழுது.
   2. தவளையைப்போல் இருக்கும் பிராணி எது?
   3. மிருகங்களில் மிகவும் பெரியது எது?
   4. மற்ற மிருகங்களுக்கு இல்லாத எந்த உறுப்பு யானைக்கு உண்டு?

2. இக்கேள்விகளுக்கு ஒரு வாக்கியத்தில் விடை சொல்லு:—
   1. வௌவால்களில் எத்தனை விதம் உண்டு?
   2. அவற்றின் பெயர் என்ன?
   3. கிருஷிகன் என்றால் யார்?
   4. வேடனுடைய தொழில் என்ன?

3. கோடிட்டிருக்கும் இடத்தில் தகுந்த வார்த்தைகள் வைத்து வாசி:—
   1. ஓலைகளைக் கீற்றுகளாகப் ——, வீடு —— வார்கள்.
   2. தேரை —— யில் வசிக்கும், தவளை —— வசிக்கும்.
   3. யானையின் முன்னம் பற்கள் —— எனப்படும்.
   4. முடவர்கள் கோல் —— நடப்பார்கள்.
   5. புகைவண்டி —— கம்பிகள்மேல் ஓடும்.
   6. வௌவால் மரத்தில் —— தொங்கும்.

4. இவற்றில் பட்சிகள் எவை? மிருகங்கள் எவை?

   அணில், ஆடு, காகம், பருந்து, பல்லி, எலி, கோழி, குதிரை, வாத்து, வௌவால்.

30. பேசும் விதம்

தெளிவாய்	அங்கவீனம்
திருத்தமாய்	உண்மை
மலர்ந்த முகம்	தயவுசெய்து
முற்றுமுடிய	வெகுமதி
நிலைமை	மெத்த வந்தனம்

1. பேசும்போது தெளிவாயும் திருத்தமாயும் பேசு. முகத்தைப் பார்த்து பேசு.

2. சந்தோஷமாய் மலர்ந்த முகத்துடன் பேசு. அதிகமாய்ச் சிரித்துப் பேசாதே.

3. ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது, அவரைத் தடுத்துப் பேசாமல், அவர் சொல்லு-வதை முற்று முடிய கேட்கவேண்டும்.

4. ஒருவனுடைய தாழ்ந்த நிலைமையைக் குறித்தும், அங்கவீனங்களைக் குறித்தும் கேலி பண்ணுவது பெரிய பிசகு.

5. கீழோர் ஆயினும் தாழ உரை.

6. எந்த நேரத்திலும், எச்சமயத்திலும், எல்-லோரிடத்திலும் உண்மையே பேசு.

7. யாரிடத்தில் இருந்தாவது ஏதாவது வாங்க-வேண்டுமானால், 'தயவு செய்து' கொடுங்கள் என்று கேள்.

8. யாராவது உனக்கு ஒரு வெகுமதி கொடுத்-தால், உடனே 'மெத்த வந்தனம்' என்று சொல்.

அப்பியாசம் 6

1. இக்கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கியத்தில் விடை சொல்லு:—

   1. பேசும்பொழுது எவ்விதமான முகத்தோடு பேச வேண்டும்?
   2. "தயவுசெய்து" என்று எப்பொழுது சொல்ல வேண்டும்?
   3. "மெத்த வந்தனம்" என்று எப்பொழுது சொல்ல வேண்டும்?

2. இப்பதங்களை உபயோகப்படுத்தி ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கியம் சொல்லு:—

   (1) பேசு, (2) பேசாதே, (3) கேலி.

3. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகள் வைத்து வாசி:—

   1. பேசும்போது —— யும் —— யும் பேசு.
   2. ஒருவர் சொல்லுவதை —— கேட்கவேண்டும்.
   3. கீழோர் ஆயினும் —— உரை.

31. வாசிக்கும் விதம்

சுமார்	இராகத்தோடு
மார்பு	முணுமுணு
சமீபம்	நிதானம்
தூரம்	நிறுத்தல்
உச்சரிக்க	மாத்திரை
குரல்	இமை

நாம் வாசிக்கும்போது நேராய் நிமிர்ந்து நிற்க வேண்டும். புஸ்தகத்தால் முகத்தை மறைத்துக் கொள்ளக்கூடாது. புஸ்தகத்தைக் கண்ணுக்கு அதிக சமீபத்தில் பிடிக்கக்கூடாது. சுமார் ஒரு அடி தூரத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். படத்தில் காட்டியிருக்கிற பிரகாரம் புஸ்தகத்தை மார்பு அளவில் உயர்த்தி, இடது கையால் பிடித்துக்கொள்ளவேண்டும்.

வாசிப்பில் இருவிதம் உண்டு. ஒன்று சத்தமாய் மற்றவர்கள் கேட்கும்படி வாசித்தல். இன்னொன்று, தனக்கு மாத்திரம் பொருள் தெரியும்படி மனசுக்குள்ளேயே மௌனமாக வாசித்தல். ஆரம்பத்தில் சத்தமாய் வாசிப்பதே வழக்கம்.

ஆனால் மேலே போகப்போக மௌன வாசிப்பு அதிகமாய் வேண்டியதிருக்கும். ஆகையால், இருவித வாசிப்பிலும் நாம் பழகவேண்டியது அவசியம். மௌன வாசிப்பில், வாசிக்கும் பொருளில் கவனம் செல்லவேண்டியதேயன்றி உச்சரிப்பு முதலிய மற்ற விஷயங்களில் அவ்வளவாய் கவனம் செல்லவேண்டியதில்லை. மற்றவர்களுக்காக நாம் சத்தமாய் வாசிக்கும்பொழுதோ ஒவ்வொரு வார்த்தையையும் திருத்தமாய் உச்சரிக்க வேண்டும். ஒரே குரலாய் வாசிக்காமல், உயர்த்தவேண்டிய இடத்தில் உயர்த்தியும், தாழ்த்தவேண்டிய இடத்தில் தாழ்த்தியும், வாசிக்கவேண்டும். இராகத்தோடு வாசிப்பது நல்லதல்ல. நாம் பேசுகிறதுபோலவே வாசிக்கவும் பிரயாசப்படவேண்டும். மற்றவர்களுக்கு கேட்காத விதமாய் முணுமுணு என்று வாய்க்குள்ளே வாசிப்பது சரியல்ல. உரத்த சத்தமாய் காட்டுச்சத்தம் போட்டு வாசிப்பதும் சரியல்ல. கேட்கிறவர்களுக்கு கருத்து விளங்கும்படி நிதானமாய் வாசிக்கவேண்டும். அவசரப்படாமல், மெதுவாய் நிறுத்தவேண்டிய இடங்களில் நிறுத்தி, வாசிக்கவேண்டும்.

புஸ்தகங்களில் சாதாரணமாய் ஆறு நிறுத்தல் புள்ளிகள் உபயோகப்படுகின்றன. அவை யாவன:—

, இது கால்புள்ளி. இந்தப் புள்ளி இருக்கிற இடங்களில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்-

டும். மாத்திரை என்பது ஒரு தடவை கண் இமை கொட்டும் கால அளவாம்.

; இது அரைப் புள்ளி. இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

: இது முக்கால் புள்ளி. இங்கு மூன்று மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

. இது முற்றுப் புள்ளி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

? இது கேள்விக் குறி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

! இது ஆச்சரியக் குறி. இங்கு மூன்று அல்லது நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

அப்பியாசம் 7

1. இக்கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாக்கியத்தில் விடை சொல்லு:—
    1. நாம் வாசிக்கும்போது எப்படி நிற்கவேண்டும்?
    2. எந்தக் கையால் புஸ்தகத்தைப் பிடித்துக் கொள்ளவேண்டும்?
    3. எத்தனை விதமான வாசிப்பு உண்டு?
    4. மாத்திரை அளவு என்றால் என்ன?

2. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் எழுது:—
   (1) வலதுகை, (2) உயர்த்து, (3) சமீபம்.

3. இமை கொட்டிக் காட்டு.

4. இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றையும் உபயோகப்படுத்தி ஒவ்வொரு வாக்கியம் சொல்லு:—
   சரி, தப்பிதம், நேரம்.



32. எழுதும் விதம்

கற்பலகை	எழுதுகோல்
கரும் பலகை	சங்கிலித் தொடர்
சீமைச் சுண்ணும்பு	உதறக்கூடாது
காகிதப் பென்சில்	மை ஒற்றும் காகிதம்
ஓலைச்சுவடி	எஃகுமுள் பேனு
எழுத்தாணி	ஊற்றுப் பேனு

நாம் சாதாரணமாக கற்பலகையிலாவது, கரும்பலகையிலாவது, காகிதத்திலாவது எழுதுகிறோம். கற்பலகையில் சிலேட்டுக் குச்சியினுலும், கரும் பலகையில் சீமைச் சுண்ணும்பினுலும், காகிதத்தில் காகிதப் பென்சிலாலும் பேனுவாலும் எழுது-

கிறோம். பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறு பிள்ளை-கள்தான் கற்பலகைகளில் எழுதுவார்கள். கரும் பலகைகளைப் பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கிறார்கள். சில திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பனைஓலைச் சுவடிகளில் எழுத்தாணிகளால் எழுதுவார்கள். ஆனால், தற்காலத்தில் காகிதத்தில்தான் அநேகமாய் எல்லாரும் எழுதுகிறார்கள். ஆகையால், காகிதத்தில் நன்றாய் எழுத ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் காகிதப் பென்சிலால் எழுதிப் பழகுவது நலம். காப்பி புஸ்தகங்களில் இரட்டைக் கோடுகள் போட்டு பெரிய எழுத்துக்களாக எழுதிப் பழகவேண்டும். எழுதுகோல் நீளமாக இருக்கவேண்டும். குட்டையாக இருந்தால் எழுத்து சுத்தமாய் இருக்கமாட்டாது. பென்சில் குட்டையாய்ப் போய்விட்டால் ஒரு குழாயில் போட்டு நீளமாயிருக்கும்படி செய்துகொள்ள வேண்டும். முதல் மூன்று விரல்களைக் கொண்டும் படத்தில் காட்டியபடி எழுதுகோலைப் பிடித்துக்கொள்ளவேண்டும். எழுதும்பொழுது நன்றாய் நிமிர்ந்து நேராய் இருக்கவேண்டும். மேசைமேல் படுத்துக் கொண்டாவது, குனிந்துகொண்டாவது, தலையைச் சாய்த்துக்கொண்டாவது எழுதக்கூடாது.

இரட்டைக் கோடுகள் போட்டு பெரிய எழுத்துக்களாக எழுதிப் பழகினபிறகு, ஒற்றைக்

கோட்டில் சிறு எழுத்துக்களாக எழுதிப் பழக வேண்டும்.

ஒவ்வொரு எழுத்தும் அச்செழுத்துப் போல சுத்தமாயும், அழகாயும் இருக்கவேண்டும். சங்கிலித் தொடர்போல் எழுத்துக்களைச் சேர்த்து எழுதக்கூடாது. அப்படி எழுதினால் தெளிவாய் வாசிக்க முடியாது.

பேனாவில் மையைத் தொட்டு கண்ட இடம் எல்லாம் உதறக்கூடாது. காகிதத்தில் மை விழாமல் சுத்தமாய் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். மை ஒற்றும் காகிதம் ஒன்று எழுதும்பொழுது பக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். காகிதத்தில் மை சிதறி விழுந்துவிட்டால், மை ஒற்றும் காகிதத்தால் விரைந்து ஒற்றிவிடவேண்டும். காகிதம்வைத்து எழுதும்மேசையும் சுத்தமாயிருக்கவேண்டும்.

முதலில் எஃகுமுள் பேனாவினால் எழுதினால் எழுத்துப் படியும். எழுத்து நன்ருய்ப் படிந்தபின் ஊற்றுப்பேனா உபயோகிக்கலாம்.

அப்பியாசம் 8

1. ஒவ்வொரு வாக்கியத்தில் விடை எழுது:—

   1. எழுதும்போது எப்படி உட்கார்ந்திருக்கவேண்டும்?

   2. எப்படி உட்கார்ந்திருக்கக்கூடாது?

3. எழுதுகோலை எந்த விரல்களால் பிடித்துக் கொள்ளவேண்டும்?

4. ஓலைச் சுவடியில் எதினால் எழுதுவார்கள்?

2. இவ்வார்த்தைகளை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லு:—

(1) ஒற்றைக்கோடு, (2) ஊற்றுப்பேனா, (3) மை ஒற்றும் காகிதம்.

3. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் எழுது:—

நீளம், குனிந்து, பெரிய, சுத்தம்.

33. நாள்—வாரம்

கிழமை	ஆபீசுகள்
ஞாயிறு	தொழிற்சாலை
திங்கள்	விடுமுறை
செவ்வாய்	ஓய்வுநாள்
புதன்	கால அட்டவணை
வியாழன்	முழுகுவது
வெள்ளி	தொழுவது
சனி	சாலவும்

கோபாலா, நேற்று நமக்குப் பள்ளிக்கூடம் இல்லையே, அது ஏன்? உனக்குத் தெரியுமா?

அது தெரியாதா? நேற்று ஞாயிற்றுக்கிழமை. அது ஓய்வுநாள். அந்த நாளில் எல்லா ஆபீசு-களும், பாடசாலைகளும், தொழிற்சாலைகளும் மூடி-யிருக்கும்.

பள்ளிக்கூடத்தில் தொங்கவிட்டிருக்கும் கால அட்டவணையைப் பார். திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஆறு நாட்களுக்கும் பாடம் குறித்திருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள், ஆகையால் அந்த நாள் கால அட்டவணையில் இல்லை. அது வாரத்தின் முதல் நாளாய் இருப்பதால், நாம் அந்த நாளில் கோவிலுக்குப் போய் கடவுளைத் தொழுதுகொள்ளும்படி பள்ளிக்கூடம் மூடப்பட்டிருக்கிறது. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று."

சனிக்கிழமைகளில் நாம் எண்ணெய் தேய்த்து முழுகுவதால் அந்த நாட்களில் அரை நாள் மாத்திரம் பள்ளிக்கூடம் உண்டு. சில ஊர்களில் சனிக்கிழமைகூட பள்ளிக்கூடத்தை முழு நாளும் மூடி விடுகிறார்கள்.

ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள். ஏழு நாள்கள் ஒரு வாரம். ஒரு வாரத்துக்கு உரிய ஏழு நாட்களாவன:

1. ஞாயிற்றுக்கிழமை
2. திங்கட்கிழமை
3. செவ்வாய்க்கிழமை
4. புதன்கிழமை
5. வியாழக்கிழமை
6. வெள்ளிக்கிழமை
7. சனிக்கிழமை

அப்பியாசம் 9

1. இவற்றை மௌனமாகப் படித்து விடை எழுது:—

    1. ஒரு வாரத்துக்கு எத்தனை நாட்கள்?
    2. அவற்றின் பெயர்களை எழுது.
    3. எந்த நாள் ஓய்வுநாள்?

2. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தை வைத்து வாசி:—

    1. வாரத்தின் கடைசி நாள் ——.
    2. ஒரு —— ஒரு —— சேர்ந்தது ஒரு நாள்.
    3. ஆலயம் —— சாலவும் ——.

3. இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றையும் உபயோகப் படுத்தி ஒவ்வொரு வாக்கியம் எழுது:—

    (1) நேற்று, (2) இன்று, (3) நாளைக்கு.



34. காகம்

கறுப்பன்	சிநேகிதர்
கள்ளன்	எச்சரிப்பு
பரிகாசம்	துப்பாக்கி
எழுந்திரு	தைரியம்

கப்பி நீட்டிவிட்டீர்

காக்கையாரே, காக்கையாரே, வாரும் ஐயா, வந்தனம்.

கா, கா, கா, கா.

என்ன ஐயா, கா, கா, கா என்கிறீர்? "நான் கறுப்பன், நான் கறுப்பன், நான் கறுப்பன்" என்று சொல்லுகிறீரோ?

கா, கா, கா, கா.

ஏன் ஐயா, திரும்பவும் கா, கா, கா என்கிறீர்? "நான் கள்ளன், நான் கள்ளன், நான் கள்ளன்" என்கிறீரோ?

கா, கா, கா, கா.

ஏது, பரிகாசம் செய்கிறீர்? "காலையில் எழுந்திரு, காலையில் எழுந்திரு, காலையில் எழுந்திரு" என்று எனக்குப் புத்தி சொல்லுகிறீரோ?

கா, கா, கா, கா.

கா, கா, காவென்று பக்கத்தில் ஒரு சிநேகிதரையும் கூட்டிக்கொண்டீரே. அவர் ஏன்? நீர் திருடப் போகும்பொழுது காவல் காத்துக்கொண்டு உம்மை எச்சரிப்பதற்கோ? ஓ ஹோ, என் கையில் இருக்கிற பலகாரத்தை அடித்துக்கொண்டு போகப் பார்க்கிறீரோ? வெகு நேர்த்தி! இதற்குத்தானு உமக்கு வந்தனம் சொன்னேன்.

என்னுடைய விளையாட்டுத் துப்பாக்கியைப் பார்த்தீரா? இதோ காட்டுகிறேன் பாரும். டப், டுப். இவ்வளவுதானு ஐயா உம்முடைய தைரியம்? விளையாட்டுத் துப்பாக்கியைக் கண்டவுடனே கா, கா, காவென்று கத்திக்கொண்டு கம்பி நீட்டிவிட்டீரே.

அப்பியாசம் 10

1. ஒரு வாக்கியத்தில் விடை எழுது:—

    1. காக்கையின் நிறம் என்ன?
    2. காக்கை எப்பொழுது எழுந்திருக்கும்?
    3. துப்பாக்கியைக் கண்டால் காக்கை என்ன செய்யும்?
    4. "கம்பி நீட்டிவிட்டீர்" என்றால் அர்த்தம் என்ன?

2. இப்பதங்களை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லு:—

    (1) என், (2) ஏன், (3) நீ, (4) நீர்.

3. காக்கையார் கதையை இரண்டு பிள்ளைகள் நடித்துக் காட்டலாம்.

35. நன்றியுள்ள நாய்

நன்றி	திடீர்
உணவு	குழந்தை
காப்பாற்றி	குளம்

ஒரு வீட்டில் ஒரு நாய் இருந்தது. அந்த வீட்டார் அதை வெகு அன்பாக வளர்த்தார்கள். அதற்கு நல்ல உணவுகள் கொடுத்து காப்பாற்றி வந்தார்கள்.

ஒரு நாள் அவர்களுடைய சிறு குழந்தை வெளியே விளையாடிக்கொண் டிருக்கும்போது, பக்கத்தில் இருந்த குளத்தில் விழுந்துவிட்டது. அருகில் ஜனங்கள் எவரும் இல்லை. வீட்டுத் திண்ணையில் படுத்திருந்த நாய் குழந்தை குளத்தில் விழுந்த சத்தத்தைக் கேட்டு, திடீரென்று எழுந்து, ஓடி, தண்ணீரில் குதித்து, குழந்தையைக் கௌவிக் கரையில் கொண்டுவந்து சேர்த்தது. சகலரும் சந்தோஷப்பட்டு, நாயின் செய்கையை மிகவும் மெச்சிக்கொண்டார்கள். அந்நாயின் நன்றியை அவ்வீட்டார் தங்கள் ஜீவகாலம் முழுவதும் மறக்கவில்லை.

அப்பியாசம் 11

1. ஒரு வாக்கியத்தில் விடை எழுது:—

    1. குளத்தில் விழுந்தது யார்?
    2. நாய் அப்பொழுது எங்கே இருந்தது?
    3. குளத்தில் விழுந்த சத்தம் கேட்டவுடன் நாய் என்ன செய்தது?

2. இப்பதங்களை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லு:—

    (1) கரை, (2) கறை, (3) குளம், (4) குலம்.

3. எதிர் வார்த்தை எழுது:—

    (1) வெளியே, (2) சிறு குழந்தை, (3) அருகில்.

4. இவற்றைச் சத்தமாய்ப் படி:—

    (1) குளத்தில் குழந்தை விழுந்தது. (2) குழந்தை வெளியே விளையாடிக்கொண்டிருந்தது. (3) நாயின் நன்றியை ஜீவகாலம் முழுவதும் அவர்கள் மறக்கவில்லை.

36. நிலா

நிலா
பொருள்
சம்பாதிக்க
என்னத்துக்கு
ஒருவருக்கொருவர்
உண்டாக்க
வெளிச்சம்
கொடுத்து

நிலாவே, நிலாவே, எங்கே போனுய்?
நிலக்கோட்டைக்கு நெல் வாங்கப் போனேன்.
நெல் என்னத்துக்கு?
சாதம் சாப்பிட.
சாதம் என்னத்துக்கு?
உடம்புக்கு பலம் உண்டாக்க.
பலம் என்னத்துக்கு?
வேலே செய்ய.
வேலே என்னத்துக்கு?

பொருள் சம்பாதிக்க.
பொருள் என்னத்துக்கு?
மற்றவர்களுக்கு உதவிசெய்ய.
மற்றவர்களுக்கு ஏன் உதவிசெய்யவேண்டும்?

ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்காகவே நாம் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். அதனால் தான் நான் இரவில் எல்லாருக்கும் வெளிச்சம் கொடுத்து உதவுகிறேன்.

அப்பியாசம் 12

1. ஒரு வாக்கியத்தில் விடை எழுது:—
   1. நாம் ஏன் சாப்பிடவேண்டும்?
   2. நாம் ஏன் வேலை செய்யவேண்டும்?
   3. நமக்கு இரவில் வெளிச்சம் கொடுப்பது எது?
   4. பகலில் வெளிச்சம் கொடுப்பது எது?

2. வேலை, வேளை—இவ்வார்த்தைகளை உபயோகப்படுத்தி ஒரு வாக்கியம் சொல்லு.

3. எதிர் வார்த்தை சொல்லு:—

   (1) போ, (2) இரவு, (3) வெளிச்சம், (4) வேண்டும்.

37. கடை வீதி

மிட்டாய்	உப்பு	ஜவளி
மெதுவாய்	புளி	வேஷ்டி
பரிந்து	கடுகு	புடவை
சொக்காய்	வெந்தயம்	சீட்டி
சொகுசாய்	சீரகம்	வாழை
மளிகை	கம்பு	கிச்சிலி
மிளகு	கேழ்வரகு	திராட்சை
மிளகாய்	கோதுமை	பந்து
கொத்துமல்லி	கொள்ளு	பலூன்
சர்க்கரை	பருப்பு	புல்லாங்குழல்

கை வீசம்மா கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு
மிட்டாய் வாங்கலாம் கை வீசு
மெதுவாய்த் தின்னலாம் கை வீசு
பழங்கள் வாங்கலாம் கை வீசு
பரிந்து புசிக்கலாம் கை வீசு
சொக்காய் வாங்கலாம் கை வீசு
சொகுசாய்ப் போடலாம் கை வீசு.

பொன்னன் ஒரு நாள் தன் தாயாரோடு கடை வீதிப் பக்கம் போனான். கடையில் நமக்கு

வேண்டிய சாமான்கள் யாவும் விலைக்கு வாங்கலாம். பொன்னன் சில விளையாட்டுச் சாமான்களும், தின்பண்டங்களும் வாங்கும்படி போனான். கடையில் அநேக பொருள்களைப் பார்த்தான்.

அவை சம்பந்தமாய் பல விஷயங்களையும் தெரிந்துகொண்டான்.

மளிகைக் கடையில் மஞ்சள், மிளகு, மிளகாய், கொத்துமல்லி, உப்பு, புளி, கடுகு, வெந்த-

யம், சீரகம், வெல்லம், சர்க்கரை, நெய், எண்ணெய், சீயக்காய் முதலிய வஸ்துக்கள் விற்கிறதைப் பார்த்தான்.

பக்கத்தில் ஒருவன் அரிசி, கம்பு, கேழ்வரகு, கோதுமை, பயறு, கொள்ளு, பருப்பு முதலிய தானியங்கள் விற்றுக்கொண்டிருந்தான்.

ஜவளிக்கடையில் வேஷ்டி, புடவை, அங்கவஸ்திரம், பலவிதமான சீட்டித் துணிகள், பட்டுகள் முதலியவை அழகான கண்ணுடி பீரோவில் வைக்கப்பட்டிருந்தன. சில தினுசுகள் வெளியேயும் இருந்தன.

பழக்கடையில் வாழைப்பழம், மாம்பழம், கிச்சிலிப்பழம், திராட்சைப்பழம், மாதுளம்பழம், அன்ளுசி, பேரிக்காய், சீத்தாப்பழம், கொய்யாப் பழம் முதலிய பழங்கள் இருந்தன. பொன்னன் இரண்டணுவுக்குக் கிச்சிலிப்பழமும், இரண்டணுவுக்கு திராக்ஷைப்பழமும் வாங்கிக்கொண்டான்.

பின்பு விளையாட்டுச் சாமான்கள் விற்கும் கடைக்குப் போனுன். அங்கே பலவிதமான செப்புகள், ரெயில்வண்டி, மோட்டார்கார், புல்லாங்குழல், பம்பரம், பந்து, பலூன், வேடிக்கையான பொம்மைகள் யாவும் இருந்தன. பொன்னன் தனக்கு ஒரு ரப்பர் பந்தும், தன் தம்பிக்கு

ஒரு புல்லாங்குழலும் வாங்கினான். பந்தின் விலை மூன்றணா, புல்லாங்குழல் இரண்டணா.

பொன்னன் கடைக்குப் போகும்பொழுது ஒரு ரூபாய் கொண்டுபோனான். அதில் பழக்கடையில் நாலு அணா செலவாகிவிட்டது. மீதி ஒரு எட்டு அணாவும், ஒரு நாலு அணாவுமாக, பன்னிரண்டு அணா இருந்தது. எட்டு அணாவை விளையாட்டுச் சாமான் விற்கும் கடைக்காரனிடத்தில் கொடுத்து மீதி கேட்டான். கடைக்காரன் சரியாய் கணக்குப் பாராமல் பொன்னன் கையில் நாலு அணா கொடுத்தான். பொன்னனுக்கு கணக்குத் தெரியும். உண்மையுள்ள பையன். ஆகையால் தனக்கு வரவேண்டியது மூன்றணா தான் என்று சொல்லி, கடைக்காரனிடத்தில் ஒரு அணாவைத் திருப்பிக் கொடுத்தான். கடைக்காரன் சந்தோஷப்பட்டு இவன் உண்மை பேசினதற்காக இவனுக்கு ஒரு ரெயில்வண்டி இனாமாகக் கொடுத்தான்.

தாயாரும் தன் பிள்ளை உண்மை பேசினதற்காக மிகவும் சந்தோஷம் அடைந்து, அவனுக்குப் பிரியமான சில தின்பண்டங்களும், ஒரு சொக்காயும் வாங்கிக்கொடுத்தாள். பின்பு இருவரும் சந்தோஷமாக "கை வீசம்மா கை வீசு" என்று பாடிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்கள்.

அப்பியாசம் 13

1. ஒரு வாக்கியத்தில் விடை எழுது:—
    1. மளிகைக்கடையில் என்ன சாமான்கள் வாங்கலாம்?
    2. ஒரு ரூபாய்க்கு எத்தனை அணா?
    3. ஒரு ரூபாயில் ஒன்பது அணா செலவாகிவிட்டால் மீதி எவ்வளவு?

2. அடியிற் கண்ட சாமான்களில் எவை ஜவளிக்கடையில் கிடைக்கும்?
   மஞ்சள், மிளகு, வேஷ்டி, சீட்டி, பருப்பு, புடவை, கம்பு, மாம்பழம்.

3. ஒன்றாயிருந்தால் கடை என்றும் ஒன்றுக்கு அதிகமாயிருந்தால் கடைகள் என்றும் சொல்லுவோம். அம்மாதிரியே கீழே கொடுத்திருக்கும் வார்த்தைகளுக்கும் எழுது:—

ஒன்று	பல
கடை	கடைகள்
வண்டி	———
துணி	———
கண்	———
காது	———
வேஷ்டி	———
புடவை	———
பந்து	———
ரூபாய்	———
கப்பல்	———

38. கடிதம் எழுதுதல்

கடிதம்	கும்பகோணம்
லீவு	கீழ்ப்படிதலுள்ள
வணக்கம்	மாணுக்கன்

[லீவுக்காக உபாத்தியாயருக்கு எழுதுவது]

தஞ்சாவூர்,
1940 ஜுலை 15.

ம-௱-௱-ஸ்ரீ இரண்டாவது வகுப்பு உபாத்தி-யாயர் அவர்களுக்கு பாலச்சந்திரன் வணக்கமாய் எழுதிக்கொள்வது.

ஐயா,

நாளைக்கு கும்பகோணத்தில் என் மாமாவுக்குக் கலியாணம் நடக்கப்போகிறது. அதற்காக எங்கள் வீட்டில் யாவரும் போகிருர்கள். நானும் போகவேண்டும். ஆகையால் தயவு செய்து எனக்கு இன்று முதல் மூன்று நாட்களுக்கு லீவு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணுக்கன்
ச. பாலச்சந்திரன்

அப்பியாசம் 14

1. கடிதம் எழுதுவதில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் எவை? கடிதத்தில் எத்தனை பாகங்கள் உண்டு?

[கடிதத்தில் ஐந்து பாகங்கள் உண்டு.

1. எழுதுகிறவரின் இருப்பிடமும் தேதியும். இது மேல் பாகத்தின் வலப்பக்கத்தில் இருக்கவேண்டும்.

2. யாருக்கு எழுதுகிறோமோ அவரை அழைக்கும் முறை. இதை அதற்குக்கீழ் இடதுபக்கமாக ஆரம்பித்து எழுதவேண்டும்.

3. சமாசாரம்.

4. முடிவு. தகுந்த வணக்கத்துடன் அடியில் வலப் பக்கத்தில் கையெழுத்து வைக்கவேண்டும்.

5. மேல்விலாசம். எழுதின கடிதத்தை மடித்து ஒரு உறையில் போட்டு யாருக்கு எழுதுகிறோமோ அவருடைய பெயரும் விலாசமும் எழுதவேண்டும்.]

2. இன்று தலை நோவாயிருப்பதால் ஒரு நாள் லீவு கொடுக்கவேண்டும் என்று உபாத்தியாயருக்கு ஒரு கடிதம் எழுது.



39. மாம்பழம்

ஆசை	புதைத்து
நேர்த்தியான	மாங்கன்று
சித்திரம்	துவர்ப்பு
களிமண்	இன்பம்

மாம்பழம் கண்ணுக்கு அழகாய் இருக்கும். நாவுக்கு ருசியாய் இருக்கும். சிறிய பிள்ளைகள் மாத்திரமல்ல, பெரிய மனிதர் கூட மாம்பழத்தை ஆசையுடன் புசிப்பார்கள்.

படத்தில் இருக்கும் மாம்பழம் கண்ணுக்கு அழகாய்க் காணப்படுகிறது; ஆனால் அதற்கு ருசி கிடையாது. மாம்பழ வாசனையும் கிடையாது. நாம் அதைச் சாப்பிடவும் மாட்டோம். ஏனென்றால் அது உண்மையான மாம்பழம் அல்ல. மாம்பழத்தைப் போன்ற ஒரு படம்.

மாம்பழத்தைப்போல நேர்த்தியான சித்திரம் நாம் வரையலாம். அதில் காணப்படும் நிறங்-

களை யெல்லாம் சித்திரத்தில் காட்டலாம். களிமண்ணால் ஒரு மாம்பழம் செய்து, வர்ணம் கொடுத்து மற்றவர்களை ஏமாற்றிவிடலாம். ஆனால் நாம் செய்யும் பழம் புசிக்கக்கூடிய வாசனையும் ருசியும் உள்ள பழம் ஆகமாட்டாது.

மாமரத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் மாம்பழத்தின் இரசம் மதுரமாயிருக்கும். வாசனை இன்பமாயிருக்கும். அதின் கொட்டைக்குள் பருப்பு இருக்கும். அது துவர்ப்பாய் இருக்கும். கொட்டையை மண்ணில் புதைத்து தண்ணீர் விட்டால் அழகான சிறு மாங்கன்று முளைக்கும். பின்பு அது படிப்படியாக வளர்ந்து, மரம் ஆகிப் பலன்தரும்.

மனுஷரால் அவ்விதமான மாம்பழங்களும், மாங்கொட்டைகளும், மாமரங்களும் உண்டாக்க முடியாது. அவைகள் நம்மை விட மேலான அறிவுள்ள ஒருவரால் உண்டாக்கப்பட்டவைகள். அவருக்குக் கடவுள் என்று பெயர்.

அப்பியாசம் 15

1. ஒரு வாக்கியத்தில் விடை எழுது:—
   1. மாங்கொட்டைப் பருப்பின் ருசி எப்படியிருக்கும்?
   2. மனுஷரால் மாம்பழங்கள் உண்டாக்க முடியுமா?
   3. அவைகளை உண்டாக்கினது யார்?

2. மாமரத்தின்—(1) இலை, (2) பூ, (3) காய், (4) பழம் ஒவ்வொன்றின் நிறம் என்ன? உனக்குத் தெரிந்த வேறு இரண்டு நிறங்களின் பெயர் சொல்லு.

3. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தை வைத்து வாசி:—
மாம்பழம் —— க்கு ருசியாய் இருக்கும், —— க்கு அழகாய் இருக்கும்.

4. இந்த அட்டவணையைப் பூர்த்திசெய்:—

ஒன்று	பல
பழம்	பழங்கள்
படம்	——
மரம்	——
பண்டம்	——
பம்பரம்	——
மிருகம்	——
தந்தம்	——
தானியம்	——
துவாரம்	——
சித்திரம்	——
நிறம்	——

40. வேத வாக்கியங்கள்

குடியன்	இளைஞர்
போஜனப்பிரியன்	மூப்பர்
தரித்திரர்	களவு
தாழ்த்துகிறவன்	வஞ்சனை

1. பிள்ளைகளே, உங்களைப் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயுங் கீழ்ப்படியுங்கள்.

2. ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான்.

3. உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்.

4. ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவுங் கூடாது.

5. குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரர் ஆவார்கள்.

6. தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

7. இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள்.

8. களவு செய்யாமலும், வஞ்சனை பண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்.

அப்பியாசம் 16

1. ஒரு வாக்கியத்தில் விடை எழுது:—
   1. பிள்ளைகள் யாருக்குக் கீழ்ப்படியவேண்டும்?
   2. எவர்கள் தரித்திரர் ஆவார்கள்?

2. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தை வைத்து எழுது:—
   1. தன்னைத்தான் —— எவனும் தாழ்த்தப்படுவான்.
   2. தன்னைத்தான் —— உயர்த்தப்படுவான்.

3. இந்த அட்டவணையைப் பூர்த்தி செய்:—

ஒருவன்	பலர்
இளைஞன்	இளைஞர்
மூப்பன்	——
மாணாக்கன்	——
தரித்திரன்	——
கடைக்காரன்	——
சிநேகிதன்	——
வேடன்	——

செய்யுள்

உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்கக வேண்டாம்.
2 ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.
5. போகாத இடம்தனிலே போக வேண்டாம்.
6. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.
7. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
8. நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்.
9. அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்.
10. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்.
11. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.
12. மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்.

13. தனம்தேடி உண்ணுமல் புதைக்க வேண்டாம்.

14. தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

15. சினத்திருந்தார் வாசல் வழி சேர வேண்டாம்.

16. குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்.

17. கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்.

18. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்.

19. கோயில் இல்லா ஊரில் குடி யிருக்க வேண்டாம்.

20. தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.

21. மூத்தோர் சொல் வார்த்தைதன்னை மறக்க வேண்டாம்.

22. முன்கோபக்காரரோ டிணங்க வேண்டாம்.

23. வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்.

24. எளியாரை எதிர் இட்டுக் கொள்ள வேண்டாம்.

25. சேராத இடம் தனிலே சேர வேண்டாம்.

26. செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.

27. உற்றுரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்.

28. காணுத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்.

29. புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.

30. புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்க வேண்டாம்.

31. திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்.

32. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

33. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.

34. துர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்க வேண்டாம்.

35. வீறுன தெய்வத்தை இகழ வேண்டாம்.

செய்யுள் பாகத்தின் அரும்பத விளக்க உரை

உலகநீதி

1. ஓதாமல் = படியாமல்
2. பொல்லாங்கு = தீங்கு
3. மாதா = தாயார்
4. வஞ்சனை = கபடம்; இணங்க = உடன்பட
5. போகாத = போகத்தகாத
6. புறம் = (அவர்களுக்குப்)பின்; சொல்லி = (கோள்) சொல்லி
7. நெஞ்சு ஆர = மனம் அறிய
8. நஞ்சு = விஷஜெந்து
9. அஞ்சாமல் = பயப்படாமல்
10. அடுத்தவர் = சேர்ந்தவர்
11. போக்கு = வழி
12. மாற்றான் = பகையாளி; உறவு = பந்து; இனம்
13. தனம் = பொருள்; தேடி = சம்பாதித்து; உண்ணு மல் = அனுபவியாமல்
14. தருமம் = ஒழுக்கம்; புண்ணியம்
15. சினத்து = கோபத்தோடு; இருந்தார் = இருந்தவர்களுடைய; வாசல்வழி = வீட்டு வழி; சேர = போக
16. குற்றம் = தப்பிதம்; பாராட்டி = சொல்லிக்கொண்டு
17. கொலை = கொல்லுதல்; களவு = திருடுதல்
18. கற்றவரை = படித்தவரை; பழிக்க = நிந்திக்க

19. குடியிருக்க = வாசம்செய்ய
20. தாழ்ந்தவரை = கீழ்ப்பட்டவர்களை
21. மூத்தோர் = பெரியோர்
22. முன்கோபக்காரர் = முன்பின் யோசியாமல் கோபம் கொள்பவர்
23. கூலி = சம்பளம்
24. எளியார் = ஏழைகள்; எதிர் இட்டுக்கொள்ள = எதிர்த்து நின்று அவர்களுக்குக் கெடுதல் செய்ய
25. சேராத = சேரத்தகாத
26. நன்றி = நன்மை
27. உற்றூர் = பந்துக்கள்; உதாசினங்கள் = நிந்தையான வார்த்தைகள்
28. காணுத = (கண்களால்)பார்த்திராத; கட்டுரைக்க = (கண்டதாக) உறுதிகூற
29. புண்பட = (மனம்) புண்ணுகும்படி
30. புறம்சொல்லி = (பிறர்மேல்) நிந்தைகளைச் சொல்லி
31. திறம் = வல்லமை; கலகம் = சண்டை
32. தெய்வம் = கடவுள்
33. இறந்தாலும் = சாகும்படி நேர்ந்தாலும்
34. துர்ச்சனர் = துஷ்ட ஜனங்கள்
35. வீறுஆன = பெருமையுள்ள; இகழ = பழிக்க

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1940. B2354